ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2194/72 - 2020 සැප්තැම්බර් මස 25 වැනි සිකුරාදා - 2020.09.25

*2194/72 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978* (x) *(அ).*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும்,* PB *1437 ஆம் பதிவிலக் கத்தைக் கொண்டதும் கொழும்பு 04, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, டி கிரெட்சர் இடத்தில், 36 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளதுமான இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், அதற்கான சுருக்கீடு இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* II *இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட் டுள்ளதும், இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்டதுமான பட்டத்தின் அளிப்புக்கு இட்டுச்செல்கின்றதாக அதன்கண் உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக ஒரு பட்டமளிக்கும் நிறுவகமாக இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட்டை ஏற்றங்கீகரிக்கின்றேன்.*

***அட்டவணை*** I

*நிபந்தனைகள்*

*1. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட் ஆனது, இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை, கொழும்பு 04, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, டி கிரெட்சர் இடத்தில், 36 ஆம் இலக்கத்தில் மட்டுமே நடாத்துதல் வேண்டும்.*

1A - PG 5145 — 520 (2020/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்ட மீள் பரிசீலனைக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை முனைவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

3. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட் ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது :-

(அ) க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில், வர்த்தகப் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்;

அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்புக் கற்கைநெறியொன்றுடன் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில், ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை** II

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடுகள் |
|---|---|
| வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி | பிபிஎம் கௌரவ |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்**,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2020, செத்தெம்பர் 23.

10-429

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.